புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர்: திரு.கூ.சண்முகம் பி.எஸ்.ஸி.,எம்.ஏ.,எம்.எட்.,எம்.பில்.,

ந.க.எண்.10661 / அ1/2024 நாள்: .06.2025.

பொருள்: பள்ளிக்கல்வி - தமிழ்நாடு அமைச்சுப் பணி - கருணை அடிப்படை நியமனம் - புதுக்கோட்டை மாவட்டம் - பணிக்காலத்தில் 21.05.2014 அன்று காலமான தெக்கிக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி - பட்டதாரி ஆசிரியர் - திரு.க.ரெங்கசாமி என்பாரின் வாரிசுதாரரான மகள் செல்வி.ரெ.சுஷ்மா என்பார் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக - புதுக்கோட்டை மாவட்டம் - புதுக்கோட்டை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் பணியில் சேர்ந்த நாளான 01.02.2024 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை: 1.புதுக்கோட்டை மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.680/அ1/2019 நாள்:31.01.2024.

2. புதுக்கோட்டை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் கடிதம் ந.க.எண்.1029/அ1/2024 நாள்: 06.12.2024.

3.அரசாணை (நிலை) எண்.80. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ1)) துறை, நாள் 02.03.2016

4.அரசாணை (நிலை) எண்.100. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018

5.அரசாணை(நிலை) எண்.48.தொழிலாளர் மற்றும்வேலைவாய்ப்புத் (க்யூ1) துறை, நாள் 26.02.2021.

6.அரசு கடித எண்.1308/ப.க4(1)/2023-1, பள்ளிக் கல்வித் துறை தலைமைச் செயலகம், நாள் 06.11.2023

7.சென்னை 06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.41477/ஜே/இ1/2022 . நாள்: 15.12.2023

8. அரசுக் கடித (efile) எண். 4419/தொ.க.1(1)/2024--1நாள். 17.05.2024

9.அரசாணை(நிலை)எண். 33 தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் (க்யூ1) த் துறை நாள். 08.03.2023

10. அரசாணை (நிலை) எண். 151 ப.க (SE1(1)) பள்ளிக் கல்வித் துறை நாள். 09.09.2022

11.சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு வழக்கு எண்.WP (MD) NO.25890/2019- ன் மீதான தீர்ப்பாணை நாள்:28.02.2020

12. சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு மேல்முறையீட்டு வழக்கு எண்.WA (MD) NO.699/2020 மற்றும் C.M.P.(MD) NO.4161/2020 ன் மீதான தீர்ப்பாணை நாள்:06/07/2021

*********

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஒன்றியம், தெக்கிக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்தபோது 21.05.2014இல் காலமான திரு.க.ரெங்கசாமி என்பாரின் வாரிசுதாரரான மகள் செல்வி.ரெ.சுஷ்மா என்பாருக்கு பார்வை (1)-இல் கண்டவாறு கருணை அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இளநிலை உதவியாளர் பணிவாய்ப்பு வழங்கப்பட்டு பணியில் சேர்ந்த நாளான 01.02.2024 முற்பகல் பணிவரன்முறை செய்திட கோரி பார்வை (2)இல் காணும் கடிதத்தின் படி கருத்துரு பெறப்பட்டது.

பார்வை(8)-இல் காணும் அரசுக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அறிவுரைகளின்படி விதித்தளர்வுகள் மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாத நேர்வில், நியமன அலுவலர் நிலையில் பணிவரன் முறை செய்து ஆணை வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை(3),(5)-இல் காணும் அரசாணைகளில் கருணை அடிப்படையில் நியமனம் பெற்று எவ்வித விதித்தளர்வுகள் மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு தேவைப்படாதவர்களுக்கு பணிவரன்முறை செய்வது குறித்து வழிகாட்டுதல் வழங்கப்பட்டுள்ளது. பார்வை(4)இல் காணும் அரசாணைப்படி தேர்வாணையத்தின் இசைவுபெற தேவையில்லை என்பதால் பார்வை (6)இல் காணும் அரசுக்கடிதத்தில் விதித்தளர்வு இல்லாத நேர்வுகளில் இளநிலை உதவியாளர் பதவியில் உரியஅலுவலர் நிலையில் பணிவரன்முறை செய்தபின் அரசளவில் பதிவுசெய்ய வேண்டிய அவசியம் எழவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்காணும் வழிகாட்டுதல்படிசெயல்பட பார்வை (7)இல் காணும் செயல்முறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை(8)இல் காணும் அரசுக் கடிதத்தில் பணிவரன்முறை செய்திட எவ்வித விதித்தளர்வுகளும் தேவையில்லாத நிலையில் பார்வை (9)-இல் காணும் அரசாணையின் இனம் 16-ன்படி சம்மந்தப்பட்ட நியமன அலுவலர்கள் அவரவர் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கருணை அடிப்படையில் பணியமர்த்தப்பட்ட அரசுப்பணியாளரின் பணியினை வரன்முறை செய்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

பார்வை (2)ன்படி பரிந்துரைக்கப்பட்ட, புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஒன்றியம், தெக்கிக்காடு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்தபோது 21.05.2014இல் காலமான திரு.க.ரெங்கசாமி என்பாரின் வாரிசுதாரரான மகள் செல்வி.ரெ.சுஷ்மா என்பாருக்கு பார்வை (1)-இல் கண்டவாறு கருணை அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் இளநிலை உதவியாளர் பணிவாய்ப்பு வழங்கப்பட்டு பணியில் சேர்ந்த நாளான 01.02.2024 முற்பகல் பணிவரன் முறை செய்திட கோரிய நேர்விலும், விதித்தளர்வுகள் மற்றும் அரசாணைகளுக்கு விலக்கு ஏதும் தேவைப்படாததால் பார்வை (3) முதல் பார்வை (10) முடிய உள்ள அரசாணைகள், அரசுக் கடிதங்கள், பள்ளிக் கல்வி இயக்கக செயல்முறைகளின்படி தமிழ்நாடு அமைச்சுப்

பணியில் பள்ளிக்கல்வித் துறையின் கீழ் இளநிலை உதவியாளர் பணியில் கீழ்காணுமாறு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| பணிவரன்முறை செய்யப்படும் பணியாளரின் பெயர், பதவி | இறந்த அரசு ஊழியரின் பெயர், பதவி மற்றும் பணிபுரிந்த அலுவலகம் / பள்ளி | இளநிலை உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| செல்வி.ரெ.சுஷ்மா, இளநிலை உதவியாளர், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம் புதுக்கோட்டை. | திரு.க.ரெங்கசாமி பட்டதாரி ஆசிரியர், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, தெக்கிக்காடு. புதுக்கோட்டை மாவட்டம். | 01.02.2024 முற்பகல் | 01.02.2024 முற்பகல் |

நிபந்தனைகள்

1) இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்த நாளில் இருந்து இரண்டாண்டு தகுதிகாண் பருவகாலத்தை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்திற்குள் முடிக்கவேண்டும்.

2) தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்ச்சி பெறவேண்டும்

பணிவரன்முறை சார்ந்த பதிவுகளை தனியரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறும், அசல் ஆணை, அசல் கல்விச் சான்றுகள் மற்றும் பணிப்பதிவேடு பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதல் வழங்குமாறும் சார்ந்த அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

26/06/2025

முதன்மைக் கல்வி அலுவலர்,
26.06.25 புதுக்கோட்டை

இணைப்பு
1. 10ம் வகுப்புமதிப்பெண்பட்டியல் (அசல்)
2. 10 ம்வகுப்புமதிப்பெண்பட்டியலின் உண்மைத்தன்மைசான்று (அசல்)
3. ஒருங்கிணைந்தசான்று (அசல்)
4. இறப்புச் சான்று (அசல்)
5. வாரிசு சான்று (அசல்)
6. அசல் பணிப்பதிவேடு

பெறுநர்: முதல்வர், DIET, புதுக்கோட்டை.
1.சம்பந்தப்பட்ட இளநிலைஉதவியாளர்(உரியவழியாக)
2.கோப்புக்கு
நகல்:சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி) அவர்களுக்கு தகவலுக்காகப் பணிந்தனுப்பப்படுகிறது.